# Summaries in Tamil

**1. சர்வதேச உதவிப்பணியில் மனநெருக்கம் மற்றும் பணியாளர்களுக்கான ஆதரவு**

இந்தக்கட்டுரையானது சவால்கள் நிறைந்த சூழ்நிலையில் பணியாற்றும் மனிதநேயப்பணியாளர்களை பாதிக்கும் பல்வேறுபட்ட நெருக்கக்காரணிகளைபற்றி ஆராய்கின்றது. அத்துடன் பணியாளர்களுக்கான ஆதரவு முறைகளை மீள்பரிசீலிக்கின்றது. பெரியதொரு சர்வதேச தொண்டு நிறுவனம் 2009 இல் நடத்திய வேலைத்தள நெருக்கம்பற்றிய கண்டுபிடிப்புகளை சராம்சப்படுத்துகின்றது. அத்துடன் 2003இல் அதே நிறுவனம் நடாத்திய நெருக்கீடுபற்றிய கணிப்பீட்டுடன் ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்கின்றது. இந்தக்கட்டுரையானது பதிலழித்தவரின் மனிதநேயப்பணியில் இருக்கும் முக்கிய நெருக்கக்காரணிகளுடன் ஒப்பிட்டு பதிலழிப்பவரின் சுய- மதிப்பீட்டினை அளிக்கை செய்கின்றது. அத்துடன் அவசரகால நிலைமைகளில் பணியாற்றும் மற்றும் ஒப்பிடும் வகையில் பாதுகாப்பான நிலையில் தலைமைக்காரியாலத்தில் பணியாற்றும் ஆண் பெண் ஊழியர்களின் குழு கணிப்பீட்டின் முடிவுகளையும் அளிக்கைசெய்கின்றது. இறுதியாக இந்தக்கட்டுரை சகபாடிகள் ஆதரவுட்பட, நிறுவன ஊழியர் ஆதரவு உத்திகள்பற்றிய மீள்பார்வையையும் அளிக்கைசெய்கின்றது.

**முக்கிய சொற்பதங்கள்:** சர்வதேச மனிதநேயப்பணி, நெருக்கம், கையாளும் பொறிமுறை, பணியாளர் ஆதரவு, பணியாளர் நன்னிலை, சகபாடி உதவி திட்டம்

---

**2. உளசமூக இடையீடுகளாக இயக்கம், விளையாட்டு, மற்றும் மெய்வன்மை: அபிவிருத்தியில் அவற்றின் பிரயோசனங்கள், குறைபாடுகள் பற்றிய ஓர் தர்க்க ரீதியான கலந்துரையாடல்**

முறண்பாட்டுக்குப் பின்னரான புனர்வாழ்வு, வன்முறை சந்தர்ப்பங்கள், மற்றும் அழிவின் போது அபிவிருத்திக்கு உதவும் வகையில் இயக்கம், விளையாட்டுகள், மற்றும் மெய்வன்மை என்பவற்றின் பயன்பாட்டைப் பற்றி இக் கட்டுரை தர்க்க ரீதியாகக் கலந்தாலோசிக்கிறது. நாம் உண்மையில் விளையாட்டின் மூலம் தாக்கத்தை ஏற்படுத்த விரும்பினால் அவை உள்நாட்டுக்குப் பொருத்தமான வகையில், மக்களின் பங்களிப்புடன், திருத்தமான யுக்திகளுடனும் குறிப்பான நோக்கங்களுடனும் பயன்படுத்தப்பட வேண்டும். உளசமூக இடையீட்டில் விளையாட்டு என்பது வேறு கல்வி, குணப்படுத்தல் போன்ற இடையீடுகளுடன் சேர்த்து வழங்கப்படும் போது மிகவும் பயனளிக்கும். இங்கு நாம் கலந்துரையாடும் சில சுவாரசியமான செயற்திட்டங்கள், மதிப்பீடுகளைத் தவிர மேலதிகமான பிரயோக யுக்திகள் பற்றிய



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

அறிவு எமக்குக் குறைவாகும். இயக்கம், விளையாட்டு மற்றும் மெய்வன்மையை அபிவிருத்தியைத் தூண்டும் உளசமூக இடையீடுகளாக செயற்திட்டங்களில் உபயோகிக்கவென சில முக்கிய குறிப்புகளை வழங்கியுள்ளோம். மேலும் பங்குபற்றுவோருடன மற்றும் பங்குபற்றுவோருக்கிடையிலான உறவு முறை, இடையீட்டில் பங்களிப்பை வரவேற்கும் தன்மை என்பவற்றின் முக்கியமும் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

**முக்கிய சொற்பதங்கள்:** இயக்கம், விளையாட்டுக்கள், ஆதரவு, உளசமூக இடையீடுகள், முரண்பாடு, வன்முறை

---

**3. மனிதாபிமான சந்தர்ப்பங்களில் சமய நம்பிக்கையும் மன நலனும்: வேர்ல்ட் விசனின் ஹெய்ரிக்கான பூமிநடுக்கப் பதிலழிப்யை அடிப்படையாக வைத்து ஓர் ஆய்வு**

ஹெய்ரியில் பூமி நடுக்கத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான, சமய நம்பிக்கையுடன் உளசமூக உதவி, மன நலனை இணைக்கும் இடையீடுகள் மற்றும் பொருள் வளங்களுக்கிடையில் ஓர் இடைவெளியை சர்வதேச NGO வான வேர்ல்ட் விசன் கண்டது. மன நலன் மற்றும் உளசமூக நன்நிலைக்கு சமய நம்பிக்கையின் முக்கியத்துவம் பற்றி விஞ்ஞானபூர்வ ஆதாரங்கள் இருந்தாலும், மனிதாபிமான சந்தர்ப்பங்களில் உள-சமய அணுகுமுறைகளுக்கு மிகக் குறைவான வழிகாட்டலும் இணக்கமுமே காணப்படுகிறது. இது ஹெய்ரி அவசலகால பதிலளிப்பின்போது மிகப் பொருத்தமாகிறது. இங்கு சமய செயற்பாடுகள், நம்பிக்கைகள் உள்நாட்டுக் கலாசாரத்தைக் கீழ்நிலைப்படுத்துகின்றன. இந்நிலை செயல் சார், ஒழுக்கம் சார் மனக் குழப்பங்களை ஏற்படுத்தும். தேவஸ்தானம், குருமார் மற்றும் மக்களின் சமய நம்பிக்கை என்பது ஆராயப்பட வேண்டிய விடையம், குறிப்பாக மனநலன் மற்றும் உளசமூக உதவியின் போது.

**முக்கிய சொற்கள்:** சமய நம்பிக்கை, சமய வளர்ப்பு, உள-சமயம், சமயம், ஹெய்ரி

---

**4. பலஸ்தீனிய பிள்ளைகள், வளர்ந்தோருக்கான உளசமூக உதவி: ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன் பகுதிகளிலிருந்து, நடத்தை மற்றும் உணர்ச்சிக் கோளாறுகளுக்காக MSF திட்டத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்ட மக்களினின் தகவல்களின் பகுப்பாய்வு**

Al Aqsa Intifada வின் ஆரம்பத்திலிருந்து ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன் பிரதேச பிள்ளைகளும் வளந்தோரும் தினமும் மனவழுத்தம் கொடுக்கும் சம்பவங்களுக்கு முகம்கொடுக்கிறார்கள். சிலர் மிகப் பாரதுரமான உளவியல் கோளாறகளுக்கு உள்ளாகிறார்கள். அரச சார்பற்ற நிறுவனமான ஆளுகு இவர்களுக்கு உளவியல் ஆதரவு வழங்கிவருகிறது. பலஸ்தீனுக்கேற்ற வகையிலும் தாக்கம் குறைந்த முறண்பாட்டுக்குப் பொருத்தமான வகையிலும்


Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

உளவியலியக்க குணப்படுத்தல் (psychodynamic psycho therapy) பயன்படுத்தப்படுகிறது. 2000 இலிருந்து 2006 வரை காசா மற்றும் மேற்குக் கரையிலிருந்து வந்து உளவியல் குணப்படுத்தல் பெற்ற 1773 பிள்ளைகள் மற்றும் வளர்ந்தோரிடம் பெற்ற தகவல்களை இக்கட்டுரை வழங்குகிறது. ஏறக்குறைய அரைவாசி நோயாளிகள் 4-14 வயதுக்குட்பட்ட பிள்ளைகள். சிகிச்சை முடிவில் 80% நோயாளிகளின் நிலமை திருந்தியுள்ளது. அரபுக் கலாசாரத்திற்கு அடங்கலான குறுகிய psychodynamic psychotherapy பலஸ்தீனியர்களின் உளசமூக நன்னிலையில் நேரான செல்வாக்கு செலுத்தியிருக்கலாம் என எழுத்தாளர்கள் தெரிவிக்கின்றனர். சமூக மட்ட உளசமூக அணுகுமுறைக்கு இவ்வாறான தனியாளுக்கான உளவியல் ஆதரவானது ஓர் வரப்பிரசாதம் என விவாதிக்கப்படுகிறது.

**முக்கிய சொற்கள்:** sychodynamic psychotherapy, ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன், தனியாளுக்கான உளவியல் ஆதரவு, சிகிச்சையின் முடிவு

---

**5 & 6** நாங்கள் Gaboulaud et al இன் பிரசுரத்தைப்பற்றிக் கலந்துரையாட இரண்டு பாண்டித்தியம் வாய்ந்த குழுக்களை அழைத்துள்ளோம். Yoke Rabaia, Viet Nguyen-Gillham மற்றும் Rita Giacaman அவர்கள், தனிப்பட்டரீதியிலான முறை ‘ சமூக துன்புறல் மற்றும் உளநோய் அறிகுறிகளுடன் கூடிய அவலநிலையை பின் தனிநபர் சிகிச்சை மூலம் சுகப்படக்கூடிய தன்மைய ஒன்றாக்கலாமென பயம்கொள்கின்றார்கள். அவர்கள் சமூகமட்ட உளசமூக முறையை பரப்புரைசெய்கின்றார்கள். சுசான் புரெசர் மற்றும் அகமட் பவானே தங்களுடைய விபரணத்தில் உளப்பரிமாண உளவியல்சிகிச்சை முறை பலஸ்தீனிய நிலைமைக்கு எவ்வாறு பொருந்த வேண்டுமெனவும் மொழிபெயர்பாளர்களின் முக்கிய பணி குறுக்கு கலாச்சார நிலைமைகளில் உளவியல்சிகிச்கை முறைகளில் எவ்வாறு இருக்கின்றது என்றும் பார்க்கின்றார்கள்.

---

**7. சமூக நன்னிலைக்கான அடிப்படை மற்றும் குவியப்படுத்தப்பட்ட உளசமூக இடையீடுகள்: பேர்மா/மியன்மாரில் நர்கீஸ் சூறாவளியின்பின்னான இடையீடுகள்பற்றிய கற்கை**

பேர்மா/ மியன்மாரில் உளசமூக இடையீடுகள் ஒரு புதிய சகாப்தமாகும். பேர்மாவில் நறிகீஸ் சூறாவளியின்பின் நடந்த கணிப்பீடுகள் சமூகத்திலுள்ள உளசமூக தேவைகளை பூர்த்தி செய்யவேண்டிய தேவையை குறித்துக்காட்டுகின்றது. சமூக-அரசியல் நிலைகளின் தடைகளின் அடிப்படையில் அரசசார்பற்ற நிறுவனங்கள் இந்த தேவைகளை பல்வேறுவகையில் பூர்த்திசெய்ய முயற்சிக்கின்றன. இந்த



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

களஅறிக்கை இரண்டுவகையான உளசமூக இடையீடுகளைப்பற்றி விபரிக்கின்றது. ஒரு திட்டமானது முற்றுமுழுதாக சமூக மற்றும் குழு இடையீடுகளைப்பற்றிப் பார்க்கின்றது, மற்றயதும் தனிப்பட்ட மற்றும் குழுக்களுக்கான பல்- மட்டத்திற்கிடையிலான இடையீடுகள்பற்றிப்பார்க்கின்றது . இந்த உளசமூக திட்டங்கள் தங்களுக்கிடையில்மட்டுமான திட்டங்கள் அல்ல, மாறாக எதிர்காலத்திட்டங்களுக்கான அடிப்படையாகவும் மற்றய நிறுவனங்களுக்கிடையிலான இணைப்பாகவும் இருக்கின்றன.

**முக்கிய சொற்பதங்கள்:** சமூக அடிப்படையிலான உளசமூக சேவைகள், உள்ளிணைந்த குவியப்படுத்தப்பட்ட அணுகுமுறைகள், பேர்மா / மியன்மார்

---

## கெயிற்றி பூமியதிர்விற்கு உளசமூக பதிலழிப்பு: IOM இன் அனுபவம்

2010 கெயிற்றி பூமியதிர்ச்சிக்கு ஐழுஆ இன் உடனடியான உளசமூக பதிலழிப்புபற்றியும் அதிலுள்ள அடிப்படை கொள்கைகள் பற்றியும் இந்த அறிக்கை சுருக்கமாக விபரிக்கின்றது. தேசிய மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான இணைப்பில் செயற்பாட்டு இடைத்தொடர்பாடல், நேரடியான இடையீடுகள் மற்றும் ஆழுமை வளர்த்தல் படிமுறைகள் பற்றி விபரிக்கின்றது. விபரணமானது கெயிற்றியின் கலாச்சாரம், முழுமையான மனிதநேய பணிகளை கருத்தில் கொண்டுள்ளது.

**முக்கிய சொற்பதங்கள்:** பூமியதிர்ச்சி, கெயிற்றி, IAXE வழிகாட்டல்கள், புலம்பெயர்விற்கான சர்வதேச நிறுவனம் (IOM)

---

## 9. பராமரிப்பாளர்களுக்கான பராமரிப்பு: மூலத்திட்டத்தை நடாத்திச்செல்வதா இல்லை அந்தத்தருணத்திற்கமைய விசேடமாக தயாரிக்கப்பட்ட திட்டத்தை உருவாக்குவதா?

சில மேலைத்தேய NGOக்கள் பராமரிப்பாளர்களுக்கு பராமரிப்பு கொடுக்கக்கூடிய சில மூலதிட்டங்களை உருவாக்கியுள்ளன. எழுத்தாளர்கள் ஆசிய நாடுகளை சேர்ந்த உளசமூகபணியாளர்கள். அவர்கள் மூலதிட்டத்தைவிட உள்ளுர் நிலைமைக்கு பொருத்தமான ஒரு முறையை காட்டியுள்ளார்கள். சர்வதேச நிறுவனம் ஒன்றைசேர்நத உள்ளுர்பணியாளர்கள் குழு இரண்டிற்கு மனநெருக்கத்தை கையாளளும் பயிற்சிப்பட்டறை ஒன்றினூடாக இது ஏற்படுத்தப்பட்டது. பயிற்சியின் இறுதியில் பங்குபற்றுனர்களினன் நடத்தையில் மாற்றம் தெளிவாக தெரிந்தது. அவர்கள் குறைந்த பதற்றத்துடனும் கூடிய ஆசுவாசமாகவும் காணப்பட்டார்கள். அயர்வானது தன்னம்பிக்கை, புதிய எதிர்காலத்தை உருவாக்கும் தன்மையாக மாறியிருந்தது.


Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

அவர்கள் பயிற்சியினால் தாங்கள் வலுப்பெற்றதாக உணர்ந்தார்கள். மூன்று மாதங்களின் பின்னான தொடர்பயிற்சியில் இம்மாற்றங்கள் நிலைத்திருப்பது தெரிந்தது.

---

**முக்கிய சொற்பதங்கள்:**
மனநெருக்கம். மனவடு, மனநெருக்க முகாமைத்துவம், பணியாளர் பராமரிப்பு, உதவியற்றதன்மையை உணர்தல்

**10. புத்தக மீள்பார்வை**

மருத்துவ மானுடவியலாளர் கிரேஸ் கேலோ, கோரே டி ஐவரியின் பழைய சிறுவர் போராளிகள் பற்றிய அண்மைக்கால பிரசுரமொன்றை விமர்சனரீதியாக மீள்பார்க்கின்றார். அத்துடன் வடக்கு உகண்டாவின் தத்தெடுக்கப்பட்ட பிள்ளைகள்பற்றிய தனது சொந்த ஆராய்ச்சியுடன் ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமைகளையும் பார்க்கின்றாா.



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.